கூட்ட நெரிசலில் 42 பேரும் உயிரிழந்தது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இச்சம்பவங்களில் உயிரிழந்தவர்களுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களைப் பிரிந்து வாடும் உற்றார் உறவினர்களுக்கு அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது. மேலும், இவ்விபத்துகளில் காயமுற்றோருக்கும் ஆறுதலை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

(ஆ) பட்டுக்கோட்டை அருகிலும் திருவாடானை அருகிலும் மழை வெள்ளத்தால் பேருந்துப் பயணிகள் அடித்துச் செல்லப்பட்டதில் ஏற்பட்ட உயிரிழப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பட்டுக்கோட்டை அருகிலும், திருவாடானை அருகிலும் சமீபத்திய மழை வெள்ளத்தால் பேருந்துப் பயணிகள் அடித்துச் செல்லப்பட்டதில் ஏற்பட்ட மனித உயிரிழப்புகள் குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்:

"25-11-2005 அன்று தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து புறப்பட்ட பேருந்து, பட்டுக்கோட்டைக்கு அருகே காட்டாற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலத்தின் மேல் செல்கையில் கனமழையால் சாலையில் ஏற்பட்ட காட்டாற்று வெள்ளத்தில் சிக்கியதால் 53 பேரும், இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானைக்கு அருகில் சருகணி ஆற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலத்தின் மேல் வந்த வெள்ளத்தில் சிக்கிய பயணிகள் பேருந்து அடித்துச் செல்லப்பட்டதால் 38 பேரும் உயிரிழந்தது குறித்தும், ஏராளமானோர் காயமுற்றது குறித்தும் இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இவ்விபத்துகளில் அகால மரணமடைந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும், அவர்களைப் பிரிந்து வாடும் உற்றார் உறவினர்களுக்கு அனுதாபத்தினையும், இச்சம்பவத்தில் காயமுற்றோருக்கு ஆறுதலையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இத்தீர்மானங்களை நிறைவேற்றுமுகத்தானும், இவ்விரு நிகழ்வுகளிலும் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும்வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

சட்டமன்றம் LEGISLATURE SECRETARIAT TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS